முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2020 சனவரி

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

(Business operations and management)

2020-01-26
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசிப்பதற்கு - 15 நிமிடங்கள்*
*விடை எழுதுவதற்கு - 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) *பரீட்சைக்கு விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *உங்களுக்குத் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில் விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல்*** *நிரல் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள், செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தை*** *அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.15*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் மனித விருப்பங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தொகுதி எது?

(1) சேட்டுகள், உணவு, உடைகள்
(2) பாண், பாதுகாப்பு, வீடுகள்
(3) பாண், தொழில் பாதுகாப்பு, சட்டைகள்
(4) பாதுகாப்பு, பாண், உடைகள்

**1.2** பின்வருவனவற்றுள் முகாமைச் செயன்முறையின் ஒரு தொழிற்பாடு **அல்லாதது** எது?

(1) ஒழுங்கமைத்தல்
(2) திட்டமிடல்
(3) கட்டுப்படுத்தல்
(4) சந்தைப்படுத்தல்

**1.3** பின்வரும் சந்தர்ப்பங்களில் நீதிமன்றக் கட்டளையினால் பங்குடமையொன்று கலைக்கப்படுவதுடன் **தொடர்புபடாத** சந்தர்ப்பம் எது?

(1) சகல பங்காளர்களும் கலைப்புக்கு உடன்படும்போது
(2) பங்காளர் ஒருவர், பங்காளருக்கான கடமைகளை ஆற்றுவதற்கு இயலாமல் இருக்கும்போது
(3) பங்காளர் ஒருவர் பங்குடமை உடன்படிக்கையினை வேண்டுமென்றே மீறுகின்றபோது
(4) பங்காளர் ஒருவர் துர்நடத்தை காரணமாக குற்றவாளியாக இருக்கும்போது

**1.4** பின்வருவனவற்றுள் போட்டரின் ஐந்து படைகள் மாதிரியின் ஒரு கூறாக (elements) **அமையாதது** எது?

(1) புதிய பிரவேசிப்பாளர்களின் அச்சுறுத்தல்

(2) வழங்குநர்களின் பேரம்பேசும் வலு

(3) பிரதியீட்டுப் பொருட்கள் அல்லது சேவைகளின் அச்சுறுத்தல்

(4) ஊழியர்களின் பேரம்பேசும் வலு

**1.5** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) பங்காளர்கள் சம்பளம் பெற உரித்துடையவர்கள்

(2) பங்காளர்கள் உள்ளிட்ட மூலதனத்தின் மீது வட்டி பெற உரித்துடையவர்கள்

(3) வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சகல பங்காளர்களுக்கும் உரிமையுண்டு.

(4) மேலுள்ள சகலதும்.

**1.6** பேரினச் சூழல் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) இதனை நிறுவனங்களால் கட்டுப்படுத்த முடியாது.

(2) இது மிகவும் எதிர்வுகூறக்கூடிய சூழல் ஆகும்.

(3) இது நுண்பாகச் சூழலை விடச் சிறியதாகும்.

(4) இது பணிச் சூழல் எனவும் அழைக்கப்படுகிறது.

**1.7** பின்வருவனவற்றுள் போட்டரின் பெறுமதிச் சங்கிலிக்கு இணங்க, ஒரு முதன்மை நடவடிக்கையாக இருப்பது எது?

(1) உட்கட்டமைப்பு (2) மனித வள முகாமைத்துவம்

(3) சந்தைப்படுத்தலும் விற்பனையும் (4) தொழில்நுட்பவியல் அபிவிருத்தி

**1.8** மனித வளம் பற்றாக்குறையாக இருக்கும்போதான ஒரு தந்திரோபாயம்:

(1) மேலதிக நேர வேலையை வழங்குதல் (2) தொழிலை முடிவுறுத்தல்

(3) முன்கூட்டியே இளைப்பாற அனுமதித்தல் (4) தற்காலிகமாக வேலையை நிறுத்திவைத்தல்.

**1.9** நிறுவனத்தில் வெகுமதிகளைத் தீர்மானிக்கின்ற ஒரு வெளியகக் காரணி:

(1) நிறுவனத்தின் இழப்பீட்டுக் கொள்கை

(2) வேலையின் பெறுமதி

(3) கொடுப்பனவு செய்வதற்குத் தொழில்தருநருக்குள்ள ஆற்றல்

(4) நாட்டின் வாழ்க்கைச் செலவு

**1.10** பின்வருவனவற்றுள் பொருள் அல்லது சேவை ஒன்றின் விளைதிறன்மிக்க வடிவமைப்புச் செயன்முறை ஒன்று தொடர்பில் சரியான கூற்று எது?

(1) அது வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகள் இலகுவாகவும் குறைந்த விலையிலும் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துகிறது.

(2) அது ஒரு புதிய பொருளை அல்லது சேவையை வடிவமைப்பதற்குத் தேவையான காலத்தைக் (நேரத்தைக்) குறைக்கிறது.

(3) அது பொருளின் அல்லது சேவையின் பண்பியல்புகளை வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளுடன் பொருத்திப் பார்க்கிறது.

(4) மேலுள்ள சகலதும்.

**1.11** பொருளின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் பொருளின் செயற்றிறனை உயர்த்துவதற்காக புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் பின்வரும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களில் எந்த எண்ணக்கரு கருத்திற் கொள்ளப்படுகிறது?

(1) உற்பத்தி எண்ணக்கரு (2) பொருள் எண்ணக்கரு

(3) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (4) விற்பனை எண்ணக்கரு

**1.12** பிலிப் கொட்லரின் கருத்திற்கிணங்க, பின்வருவனவற்றுள் வெற்றிகரமான பண்டக்குறி ஒன்றின் பண்பியல்பாக **அமையாதது** எது?

(1) பண்புகள் (2) நன்மைகள் (3) கலாசாரம் (4) கிரயம்

**1.13** குறிப்பிட்ட சில பொருட்கள் சந்தையில் ஒரேயளவு கேள்வி மட்டத்தை காட்டுவதில்லை. இதனால், நிலையான கேள்வியொன்றை உருவாக்குவதற்காக சந்தைப்படுத்துநர்கள் நெகிழ்ச்சியான விலைகளையும் ஊக்குவிப்புச் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர். அத்தகையதொரு கேள்வி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) இல்லாத கேள்வி (2) ஒழுங்கற்ற கேள்வி

(3) உட்கிடையான கேள்வி (4) எதிர்க் கேள்வி

**1.14** பின்வருவனவற்றுள் எது இலத்திரனியல் வர்த்தகத்தின் ஒரு வெற்றிக் **காரணியன்று**?

(1) பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்

(2) தெரிவும் பெறுமதியும்

(3) உயர் கிரயமும் நெகிழ்ச்சித்தன்மைக் குறைபாடும்

(4) தனிப்பட்ட கவனிப்பு

**1.15** பின்வருவனவற்றுள் வியாபார வெளிமூலமிடலுக்கான ஒரு காரணமாக **அமையாதது** எது?

(1) முடிப்பதற்கான நேரத்தை அதிகரித்தல்

(2) உலகளாவிய வளங்களுக்கான அணுகலைப் பெறுதல்

(3) கிரய சேமிப்பைப் பெறுதல்

(4) வியாபாரத்தின் முக்கிய ஆற்றல்களில் கவனம் செலுத்துதல்

***1.16*** *முதல்* ***1.20*** *வரையுள்ள வினாக்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொல்/ சொற்களிலிருந்து சரியானதைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல்/ சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.16** .................... *(அக இணையம் [intranet] / புற இணையம் [extranet])* என்பது நிறுவனத்தினுள் இணையத்தை அணுகுவதற்காக இணையத் தொழில்நுட்பவியலைப் பயன்படுத்துகின்ற நிறுவனம் ஒன்றின் உள்ளே காணப்படும் வலையமைப்பாகும்.

**1.17** .................... *(போட்டியாளர்கள்/ பெறுமதி முறைமைகள்)* பணிச் சூழலின் ஒரு பகுதியாகும்.

**1.18** பலங்களும் பலவீனங்களும் நிறுவனமொன்றின் .................... *(வெளிவாரி/ உள்வாரி)* காரணிகளாக இருக்கின்றன.

**1.19** .................... *(பயனுறுதித்தன்மை [effectiveness] / வினைத்திறன் [efficiency])* என்பது சரியானதைச் செய்தல் ஆகும்.

**1.20** .................... *(வேலை விபரிப்பு [job description] / வேலைக் குறிப்பீடு [job specification])* ஆனது வேலைக்குரிய பணிகளையும் பொறுப்புகளையும் உள்ளடக்குகிறது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

இலங்கையில் புகழ்பெற்ற கம்பனியொன்றான **வரையறுக்கப்பட்ட டுபெக்ஸ் தனியார் கம்பனி**யானது அண்மையில் தெற்காசியப் பிராந்தியத்தில் தனது வியாபாரச் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) (i) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் பண்பியல்புகள் (characteristics) நான்கினை (04) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(ii) பங்குடமை ஒன்றுடன் ஒப்பிடுகையில் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் அனுகூலங்கள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) பூகோளமயமாதலிலுள்ள வாய்ப்புகள் (opportunities) மூன்றினை (03) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

மனித வள முகாமைத்துவம் என்பது நிறுவனம் ஒன்றில் காணப்படும் மனித வளங்களை பயனுறுதிமிக்க வகையில் முகாமை செய்வதற்கான தந்திரோபாய அணுகுமுறை ஆகும். வேலைக்கு அறிமுகப்படுத்தல் என்பது மனித வள முகாமைத்துவத்தின் ஒரு தொழிற்பாடாக இருப்பதுடன் இது நிறுவனத்திற்கு புதிய ஊழியர்களை அறிமுகப்படுத்தும் செயன்முறை ஒன்றாகவும் அமைகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) வேலைக்கு அறிமுகப்படுத்தலானது நிறுவனமொன்றிற்கு ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) மனித வள முகாமைத்துவத்தின் நோக்கங்கள் (objectives) நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்பது இலக்குச் சந்தைகளைத் தெரிவு செய்தல் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் மதிப்பினை உருவாக்குதல், வழங்குதல் மற்றும் பிரதியிடுதல் ஆகியவற்றின் ஊடாக வாடிக்கையாளர்களைப் பெறுதல், பேணுதல் மற்றும் வளர்த்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான கலையும் விஞ்ஞானமும் ஆகும். தொடர்ந்து வேகமாக வளர்ந்து வருகின்ற இணையம் (internet) ஆனது சந்தைப்படுத்தலைப் பாதித்துள்ள மிக முக்கியமான தொழில்நுட்பவியல்களில் ஒன்றாக இருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிறுவனத்தின் சந்தைப்படுத்தலுக்கு தொழில்நுட்பவியலைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றிற்கு நிலைப்படுத்தல் (positioning) ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

தொழிற்பாட்டு முகாமைத்துவம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளின் செயன்முறையை முகாமை செய்வதற்குப் பொறுப்பான ஒரு வியாபாரச் செயற்பாடாகும். இது கம்பனியின் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற சகல வளங்களையும் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபடுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) தற்காலச் சூழமைவில் ஒரு தொழிற்பாட்டு முகாமையாளர் எதிர்நோக்குகின்ற சவால்கள் மூன்றினை (03) **விவரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பயனுறுதிமிக்க வியாபாரத் தொடர்பாடல் முறைமையொன்றின் அம்சங்கள் (features) நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**சுப்பர்மூவ்** என்பது போக்குவரத்துத் தொழிலில் ஈடுபடும் இலங்கைக் கம்பனி ஒன்றாகும். அதன் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான போக்குவரத்தினைப் பூர்த்தி செய்வதே அதன் பிரதான செயற்பாடு ஆகும். இக்கம்பனி மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் இரண்டு பிரதான கிளைகளைக் கொண்டிருக்கிறது. **சுப்பர்மூவ்** ஆனது பயணிகள் போக்குவரத்து சேவை மற்றும் அலுவலக ஊழியர்கள் போக்குவரத்து சேவை ஆகிய இரண்டு வகையான போக்குவரத்து சேவைகளை வழங்குகிறது. **சுப்பர்மூவ்** இனுடைய தூரநோக்கு ''அதன் வாடிக்கையாளர்களுக்கு தரமான போக்குவரத்துச் சேவையை வழங்குதல்'' என்பதாகும்.

எந்தவொருவரும் **சுப்பர்மூவ்** இன் அழைப்பு நிலையம் ஊடாகவோ, **சுப்பர்மூவ்** இன் இணையத்தளம் அல்லது கைப்பேசிச் செயலி ஊடாகவோ தமது பயணக் கோரிக்கையினைச் செய்ய முடியும். **சுப்பர்மூவ்** இன் முகாமையானது அவர்களுடைய ஊழியர்கள் வாடிக்கையாளர் திருப்தியை உருவாக்குகின்ற சிறந்த நபர்கள் என எப்பொழுதும் கருதுகிறது. **சுப்பர்மூவ்** இன் அழைப்பு நிலையத்தில் பணியாற்றும் நாற்பது ஊழியர்களுக்கு சேவையின் தரத்தை மேம்படுத்தல், ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், ஒன்லைன் வியாபார முகாமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி போன்ற பல்வேறு பிரிவுகளில் முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது.

2 வருடங்களுக்கும் மேலாக, **சுப்பர்மூவ்** ஆனது தங்களுடைய தரமான சேவை காரணமாக அவர்களுடைய ஒப்பீட்டு நயத்தைப் பாதுகாத்திருக்கிறது. பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஆனது வலுவான வாடிக்கையாளர் உறவினைக் கொண்டுவருகிறது என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். **சுப்பர்மூவ்** இனுடைய முகாமையானது அதன் செயற்பாடுகளை தெற்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு விரிவுபடுத்துவதற்கும் அதன் தகவல் முகாமைத்துவ முறைமைக்கு நவீன தொழில்நுட்பவியலை அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானித்திருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) பயனுறுதிமிக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றின் ஊடாக **சுப்பர்மூவ்** இனால் ஈட்டப்படும் பிரதான நன்மைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) சந்தைப்படுத்தல் எண்ணக்கருவொன்றாக, **சுப்பர்மூவ்** இனால் வாடிக்கையாளர் எண்ணக்கரு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) **சுப்பர்மூவ்** இன் சேவைத் தரத்தின் பரிமாணங்கள் (dimensions) நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) தகவல் முகாமைத்துவத்திற்காக நவீன தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி **சுப்பர்மூவ்** இனால் ஈட்டப்படக்கூடிய அனுகூலங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |